# தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

16.10.2012 P.M

17.10.2012 A.M

## மழை: தமிழக அணைகளில் நீர்வரத்து அதிகரிப்பு



தமிழ்நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. வட கிழக்குப் பருவ மழை ஓரிரு நாளில் தொடங்கும் நிலை உள்ளதால் அணைகளுக்கு வரும் நீர் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் வட கிழக்குப் பருவ மழை போதுமான அளவில் பெய்யவில்லை. இதனால் தென் மாவட்டங்களில் அணைகள் முழுமையாக நிரம்பவில்லை. அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு தென் மேற்குப் பருவ மழை பொய்த்து விட்டதாலும்

காவிரியில் தேவையான அளவு தண்ணீர் வராததாலும் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டது.

பருவ மழை குறைந்துள்ளதால் விவசாயம் மட்டுமின்றி, பல மாவட்டங்களிலும் குடிநீர் ஆதாரங்களும் வறண்டு வருகின்றன. நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து விட்டதால் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது.

இந்நிலையில், தமிழ்நாட்டின் பல இடங்களிலும் கடந்த ஒரு வார காலமாக பரவலாக மழை பெய்து வருகிறது. இன்னும் ஓரிரு நாள்களில் தென் மேற்குப் பருவ மழை முடிவுக்கு வந்து வட

கிழக்குப் பருவ மழை பெய்யத் தொடங்கும் என வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. எனினும், வட கிழக்குப் பருவ மழைக்கு முன்னதாக இப்போது பெய்து வரும் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அணைக்கட்டுகள் அமைந்துள்ள பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. வடகிழக்குப் பருவ மழை தொடங்கி, தொடர்ந்து பெய்தால் அணைகளின் நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இதே காலத்தை ஒப்பிடும்போது ஓரிரு அணைகளைத் தவிர இதர அணைகளில் இப்போது குறைவாகவே தண்ணீர் உள்ளது. எனினும், வடகிழக்குப் பருவ மழை குறிப்பிட்ட காலத்தில் தொடங்கி போதுமான அளவு பெய்தால் பாதிப்பு இருக்காது என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அணைப் பகுதிகளில் கடந்த மூன்று நாள்களாக பெய்து வரும் தொடர் மழையால் பெரும்பாலான அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக உயர்ந்துள்ளது. மேட்டூர் அணைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விநாடிக்கு 1,441 கன அடியாக இருந்த நீர்வரத்து செவ்வாய்க்கிழமை 6,695 கன அடியாக அதிகரித்துள்ளது. இதேபோல், அமராவதி அணையின் நீர்வரத்து 168 கன அடியில் இருந்து 446 கன அடியாகவும், பெரியாறு அணையின் நீர்வரத்து 819 கன அடியில் இருந்து 1,651 கன அடியாகவும், வைகை அணையின் நீர்வரத்து 258 கன அடியில் இருந்து 641 கன அடியாகவும், பாபநாசம் அணைக்கான நீர்வரத்து 114 கன அடியில் இருந்து 276 கன அடியாகவும், பெருஞ்சாணி அணைக்கான நீர்வரத்து 77 கன அடியில் இருந்து 87 கன அடியாகவும், கிருஷ்ணகிரி அணைக்கான நீர்வரத்து 123 கன அடியில் இருந்து 413 கன அடியாகவும், சோலையாறு அணைக்கான நீர்வரத்து 417 கன அடியில் இருந்து 657 கன அடியாகவும், ஆழியாறு அணைக்கான நீர்வரத்து 221 கன அடியில் இருந்து 362 கன அடியாகவும், திருமூர்த்தி அணைக்கான நீர்வரத்து 653 கன அடியில் இருந்து 723 கன அடியாகவும் அதிகரித்துள்ளது. பவானிசாகர் அணைக்கான நீர்வரத்து 7,940 கன அடியில் இருந்து 3,152 அடியாக குறைந்துள்ளது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிப் பகுதிகளிலும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. எனினும், ஏரிகளின் நீர்மட்டத்தில் பெரிய அளவில் மாற்றம் இல்லை.

முக்கிய அணைப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரையில் கடந்த 24 மணி நேரத்தில் பதிவாகியுள்ள மழை அளவு (மி.மீ.) விவரம்: மேட்டூர்-4.2, பவானிசாகர்-1.6, அமராவதி-24, பெரியாறு-5.2, வைகை-6, மணிமுத்தாறு-1.2, பேச்சிப்பாறை-7, பெருஞ்சாணி-1.8, பாபநாசம், சோலையாறு, பரம்பிக்குளம், கிருஷ்ணகிரி-3, ஆழியாறு-52.5, செங்குன்றம்-1.4, செம்பரம்பாக்கம்-

## கேரளத்துக்கு 1.25 டி.எம்.சி. தண்ணீர் வழங்க தமிழகம் ஒப்புதல்



வரும் டிசம்பர் 15-ம் தேதிக்குள் மணக்கடவு தடுப்பணையில் இருந்து கேரளத்துக்கு 1.25 டி.எம்.சி. தண்ணீர் வழங்க தமிழகம் ஒப்புக் கொண்டுள்ளது.

தமிழக, கேரள அதிகாரிகளுக்கு இடையிலான நதி நீர் இணை நிர்வாகப் பங்கீட்டுக் குழுக் கூட்டம் கோவை பொதுப்பணித்துறை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோவை பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் கே.ரங்கநாதன், மின்வாரிய கண்காணிப்புப் பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, கேரள நீர்ப் பாசனத்துறை தலைமைப் பொறியாளர் லத்திகா, கேரள மின்வாரிய தலைமைப் பொறியாளர் விஸ்வநாதன் உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட பொறியாளர்கள் பங்கேற்றனர்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்ட ஒப்பந்தப்படி ஆழியாறு அணையில் இருந்து மணக்கடவு தடுப்பணை மூலம் ஆண்டுக்கு 7.25 டி.எம்.சி. தண்ணீரும், தமிழக சோலையாறு அணையில் இருந்து ஆண்டுக்கு 12.3 டி.எம்.சி. தண்ணீரும் கேரளத்துக்கு வழங்க வேண்டும்.

2011-12-ஆம் ஆண்டுக் காலத்தில் ஒப்பந்தப்படி தமிழகத்தில் இருந்து கேரளத்துக்குத் தண்ணீர் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை பொய்த்துவிட்டதால் தமிழகப் பகுதிகளில் வறட்சி நிலவுகிறது. எனினும் கேரளத்துக்கு வரும் டிசம்பர் 15-ம் தேதிக்குள் 1.25 டி.எம்.சி. தண்ணீரை வழங்க தமிழகம் ஒப்புக் கொண்டுள்ளதாக இரு மாநில அதிகாரிகளும் தெரிவித்தனர்.

## அடுத்த 24 மணி நேரத்திற்கு மழை பெய்ய வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் புதன்கிழமை அநேக இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த 24 மணி நேரம் மழை தொடரும்: தமிழகத்தில் சில தினங்களில் வடகிழக்கு பருவமழை தொடங்க இருக்கிறது. இது தவிர, தென்மேற்கு பருவமழைக் காலம் அடுத்த இரண்டு தினங்களில் முடிவடைவுள்ள நிலையில் பல்வேறு இடங்களில் கனத்த மழை பெய்து வருகிறது. இந்த மழை அடுத்த 24 மணி நேரத்திற்கு தொடரும் என்றும் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு: சென்னையில் புதன்கிழமை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் இருக்கும். தமிழகம், புதுச்சேரி மற்றும் கேரளத்தில் அநேக இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.தமிழகத்தில் பதிவான மழையின் அளவு: (செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி - செ.மீ.): தேன்கனிக்கோட்டை, ஓசூர் - 6, பெரியகுளம், சூளகிரி, பாலக்கோடு - 4, ஏற்காடு, சோழவந்தான், ஸ்ரீவில்லிபுத்தூர் - 2, ஒட்டபிடாரம், ஸ்ரீவைகுண்டம், விளாத்திகுளம் - 1

16th oct 2012 P.M

**திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம்: இணை இயக்குநர் ஆய்வு**

மேற்கு ஆரணி ஒன்றிய வட்டாரத்தில் உள்ள அய்யம்பாளையம், வண்ணாங்குளம், அழகுசேனை, பாளைய ஏகாம்பரநல்லூர், மேல்நகர், விண்ணமங்கலம் உள்ளிட்ட கிராமங்களில் விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம் ஞாயிற்றுக்கிழமை அளிக்கப்பட்டது.

இந் நிகழ்ச்சிகளை வேளாண்மை இணை இயக்குநர் சக்கரவர்த்தி ஆய்வு செய்தார்.

மாவட்ட தரக் கட்டுப்பாடு இயக்குநர் சிவக்குமார், தரக் கட்டுப்பாட்டு அலுவலர் செல்வராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.

**தாட்கோ மானியத்துடன் கடன் பெற அவகாசம்**

நீலகிரி மாவட்டத்தில் தாட்கோ மூலமாக மானியத்துடன் கூடிய கடனுதவி பெற, இம்மாதம் 21-ம் தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக தாட்கோ மாவட்ட மேலாளர் போஜன் கூறியது: தாட்கோ மூலமாக மானியம் வழங்குவதற்கு தமிழக முதல்வரால் நடப்பாண்டில் போதிய அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதோடு, அதற்கான கால அவகாசமும் இம்மாதம் 21ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கடனுதவி பெறுபவர்கள் 18 வயது நிரம்பியவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 லட்சத்துக்குள் இருப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இத் திட்டத்தின்கீழ், பதிவு செய்ய விரும்புவர்கள் ட்ற்றல்:ஹல்ல்ப்ண்ஸ்ரீஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஸ்ரீர்.ஸ்ரீர்ம் என்ற இணையதள முகவரி மூலமாக விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும்.

குடும்ப அட்டை எண் அல்லது இருப்பிடச் சான்று, சாதிச் சான்று, வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றுடன் திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

திட்டங்கள் வாரியாக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையை தாண்டினால் அப்பதிவு ஏற்கபடாது. ஒரு குடும்ப அட்டையை வைத்து, ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும. மகளிர் சுய உதவிக்குழு சுழல் நிதி திட்டத்துக்கு விணணப்பிக்க விரும்பும் மகளிர் அனைவருமே 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்.

பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு பின்னர் வங்கிகளுக்கு அனுப்பப்படும். வங்கிகள் கடன் வழங்க உத்தரவாதம் தெரிவித்தவுடன், மானியம் வங்கிகளுக்கு விடுவிக்கப்படும். நிதி ஒதுக்கீடு மீதம் இருக்குமானால், மீண்டும் விண்ணப்பங்கள் பெறப்படும் என்றார்.

## முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.3.15, சென்னையில்
ரூ. 3.15.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை அறிவித்த றிக்கோழியின் பண்ணைக் கொள்
முதல் விலை கிலோ ரூ.57, முட்டைக் கோழி கிலோ
ரூ.55.

## பவானிசாகர் நீர்மட்டம் 41.45 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 41.45 அடியாக இருந்தது.
÷அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 5,222 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், வாய்க்காலிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.69 டி.எம்.சி.

## அதிக விலைக்கு உரங்கள் விற்றால் உரிமம் ரத்து: மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை

உரங்களை கூடுதல் விலைக்கு விற்பனை செய்பவர்களின் உரிமம் ரத்து செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை இணை இயக்குநர் எஸ். சிவசங்கரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

விவசாயிகளுக்கு தேவையான யூரியா, டிஏபி, பொட்டாஷ் மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

விற்பனையாளர்கள் உர இருப்பு மற்றும் விலை விவரங்கள் அடங்கிய விளம்பர பலகையை விவசாயிகள் அறியும் வகையில் தினமும் பார்வைக்கு வைக்க வேண்டும். வாங்கும் உரத்துக்கு உரிய ரசீதை உரக்கட்டுபாடு சட்டத்தில் உள்ளவாறு (ஆ) படிவத்தின் படி வழங்க வேண்டும். (என்) படிவத்தின்படி உர இருப்பு பதிவேடுகளை பராமரிக்க வேண்டும்.

உர மூட்டைகளில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

விவசாயம் அல்லாத இதர பயன்பாடுகளுக்கு உரங்களை விற்பனை செய்யக் கூடாது. உரிமம் பெறாமல் உரங்களை விற்பது குற்றமாகும். விதிமுறைகளை கடைபிடிக்காத விற்பனையாளர்கள் மீதும் உரக்கட்டுப்பாடு சட்டம் 1985 மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் சட்டம் 1955-ன் படி நடவடிக்கை எடுத்து, உரிமம் ரத்து செய்யப்படும்.

விவசாயிகள்; உரங்கள் வாங்கும்போது தவறாமல் ரசீது பெறவேண்டும். உர மூட்டையில் குறிப்பிட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மிகாமல் வாங்க வேண்டும். தேவையான உரங்களை மட்டும் வாங்கிப் பயன்படுத்த வேண்டும். பயிருக்கு பரிந்துரைக்கப்பட்ட அளவுக்கு மேல் உரங்களை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

புகார்களை 04322-221666 எண்ணில் தெரிவிக்கலாம்.

## கரும்பு டன்னுக்கு ரூ. 4,000 கோரி ஆர்ப்பாட்டம்

கரும்புக்கு டன்னுக்கு ரூ. 4,000 வழங்க கோரி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் கரும்பு விவசாயிகள் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை பருவம் தொடங்கவுள்ள நிலையில், மத்திய அரசும், மாநில அரசும் கரும்புக்கான விலையை இன்னும் அறிவிக்கவில்லை. உர விலை, கூலி ஆள்களுக்கான ஊதிய உயர்வு போன்றவற்றால் டன்னுக்கு ரூ. 4,000 என பருவம் தொடங்குவதற்கு முன்பு அறிவிக்க வேண்டும்.

வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும். கரும்புக்கு வாங்கிய கடனை அரசு ரத்து செய்ய வேண்டும். மின்வெட்டால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 50,000

இழப்பீடு வழங்க வேண்டும்.

மும்முனை மின்சார விநியோகம் நாளொன்றுக்கு சுமார் ஒரு மணிநேரம் மட்டுமே கிடைக்கிறது. பகலில் 6 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் தொடர்ந்து கொடுத்தால் மட்டுமே விவசாயத்தைக் காப்பாற்ற முடியும்.

இந்த நிலை நீடித்தால் விவசாயம் செய்ய முடியாத நிலை உருவாகும். எனவே, அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு உடனடியாக முத்தரப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

குருங்குளம் சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியார் சங்கத் தலைவர் எஸ். ராமநாதன் தலைமையில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பி. ராமசாமி, முன்னோடி விவசாயிகள் டி. புண்ணியமூர்த்தி, கோவிந்தராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## சூறாவளிக் காற்றில் ரூ. 50 லட்சம் வாழைகள் சேதம்

அவிநாசியில் ஞாயிற்றுக்கிழமை பெய்த சூறாவளிக் காற்றுடன் கூடிய கனமழையால், ரூ. 50 லட்சம் மதிப்பிலான சுமார் 24 ஆயிரம் வாழைமரங்கள் சேதமடைந்தன.

அவிநாசி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு சூறாவளிக் காற்றுடன் கனமழை பெய்தது. அவிநாசி, சேவூர், தண்டுக்காரம்பாளையம், கானூர்புதூர் ஆகிய பகுதிகளில் சுமார் 4 மணி நேரம் மழை நீடித்தது.

இதில், கானூர்புதூரில் அறுவடைக்குத் தயாரான நிலையில் இருந்த 14 ஆயிரத்து 700 வாழைமரங்கள் கீழே சாய்ந்தன. இதேபோல் தண்டு0க்காரம்பாளையத்தில் சுமார் 10 ஆயிரம் வாழைமரங்கள் சேமடைந்தன. இவற்றின் மதிப்பு ரூ. 50 லட்சம் இருக்கும் என்று கூறப்படுகிறது. தோட்டக்கலைத் துறை உதவி வேளாண்மை அலுவலர் ராஜூ உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

## அக்.19-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஆட்சியரக கூட்ட அரங்கில் வரும் 19-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

இதில் அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் முறையீடுகளுக்கு பதில் அளிக்க உள்ளனர்.

## விருதுநகர் பகுதியில் பரவலாக மழை: விவசாய பணிகளுக்கு ஆள்கள் தட்டுப்பாடு

விருதுநகர் சுற்றுப் பகுதி கிராமங்களில் இரவு முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. இதையடுத்து, விவசாயப் பணிகள் தொடங்கியுள்ளதால், விவசாயப் பணிகளுக்கு போதுமான ஆள்கள் கிடைக்கவில்லை. இதையடுத்து வெளியூர்களில் இருந்து கூலியாள்களை வரவழைத்து வேலை செய்து வருகின்றனர்.

விருதுநகர் வட்டார பகுதியில் கடந்த மூன்று நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு தொடங்கி, திங்கள்கிழமை காலை வரையில் அடைமழை பெய்தது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியிலிருந்து மேகமூட்டமாகவே இருந்தது. இரவு 10 மணிக்கு மேல் லேசான சாரால் மழை பெய்யத் தொடங்கி, பின்னர் பொழுது விடியும் வரையில் விட்டு, விட்டு தொடர்ந்து மழை பெய்தது. இதில், செங்குன்றாபுரம், எரிச்சநத்தம், பாவாலி, குந்தலப்பட்டி, சீனியாபுரம், வெள்ளூர், ஆமத்தூர், வடமலைக்குறிச்சி, இந்திரா நகர், உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பலத்த மழை பெய்துள்ளது. இம்மழையால் இப்பகுதி கண்மாய்களுக்கு நீர்வரத்து தொடங்கியுள்ளது.

பகலிலும் தொடர்ந்து மேகமூட்டமாகவே இருந்து வருகிறது. இதனால், விருதுநகர் வட்டார பகுதியில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து விவசாயப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். தாமதமாக மழை பெய்த போதிலும் நாற்றங்கால் விதைப்புப் பணியை விவசாயிகள் தொடங்கியுள்ளனர்.

அனைவரும் ஒரே நேரத்தில் விதைப்பு பணிகளை மேற்கொண்டு, பல்வேறு விவசாய பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அதனால், போதுமான ஆள்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் அதிக கூலி கொடுத்து வெளியூர்களிலிருந்து கூலியாள்களை அழைத்துவந்து, இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## கோபியில் ரூ. 5 லட்சத்திற்கு வாழைத்தார் ஏலம்

கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு வாரமும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது.

சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வாழைத்தார் விலை விபரம் வருமாறு:

கதளி ஒரு கிலோ ரூ. 18க்கும், நேந்திரன் 1 கிலோ ரூ. 17.50க்கும் விலை போயின. தார் ஒன்றுக்கு, செவ்வாழை- ரூ. 450, ரஸ்தாளி ரூ. 410, தேன்வாழை ரூ. 420, பூவன் ரூ. 580, ரொபஸ்ட்டோ ரூ. 300, மொந்தன் ரூ. 280, பச்சைநாடன் ரூ. 215 என அதிகபட்சமாக விலை போயின.

ஏலவிற்பனைக்கு மொத்தம் 8 ஆயிரம் வாழைத்தார்கள் வந்திருந்தன; ரூ. 5 லட்சத்திற்கு வாழைத்தார்கள் விற்பனையாகின.

தேங்காய் ஏலம்: கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற தேங்காய் ஏலத்தில் நிலவிய விலை விபரம்:

தேங்காய் ஒன்று அதிகபட்சமாக ரூ. 7.10க்கும், குறைந்தபட்சமாக ரூ. 3.80க்கும் விலை போனது; சராசரியாக ரூ. 4.80க்கு விலை நிர்ணயம் ஆனது. ஏலத்திற்கு விவசாயிகள் 6,000 தேங்காய்களைக் கொண்டு வந்திருந்தனர்.

## நெல்லை மாவட்டத்தில் பரவலாக மழை

திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக திங்கள்கிழமை மழை பெய்தது.

மாவட்டத்தில் காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராதாபுரத்தில் 29 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

திருநெல்வேலி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த 2 நாள்களாக மிதமான மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமையும் மழை நீடித்தது.

இதனால் காலையில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் சாரல் மழையில் நனைந்து கொண்டே பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்ல நேரிட்டது. தொடர் மழையால் சாலைகளிலும், தாழ்வான இடங்களிலும் தண்ணீர் தேங்கியது. இதனால் பல இடங்களில் போக்குவரத்து பாதிப்பும் காணப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராதாபுரத்தில் 29 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. பிற இடங்களில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

சேரன்மகாதேவி- 3, நாங்குநேரி- 11, பாளையங்கோட்டை- 12, திருநெல்வேலி- 1. அணைப் பகுதிகளில் பெய்த மழை: கொடுமுடியாறு- 20, கருப்பாநதி- 3.

பாபநாசம் அணைப் பகுதிகளில்...: திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 2 மி.மீ. மழையும், பாபநாசம் கீழ் அணையில் 14 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 13 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. திங்கள்கிழமை அணைப் பகுதி, விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம்

பகுதியில் மழை மேகம் காணப்படுகிறது. சாரல் மழை பெய்து கொண்டிருந்தது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 38.55 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 170.37 கனஅடி நீர்வரத்து இருந்தது.

அணையில் இருந்து 305 கனஅடி தண்ணீர் ஆற்றில் திறந்து விடப்படுகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 52.69 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 44.06 அடியாகவும் இருந்தது.

களக்காடு பகுதியில் பலத்த மழை: களக்காடு பகுதியில் திங்கள்கிழமை அதிகாலை சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது.

தொடர்ந்து பிற்பகல் வரையிலும் லேசான தூறல் காணப்பட்டது. இந்த மழை வாழை விவசாயிகளுக்கு பயனளித்துள்ளது. வடகிழக்குப் பருவமழை தொடங்கியதை அடுத்து, விவசாயிகள் விவசாயப் பணிகளைத் தொடங்க ஆயத்தமாகியுள்ளனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

விவசாய மலர்

17.10.2012 A.M

## திருந்திய நெல் சாகுபடி மையம் வேளாண் துணை இயக்குனர் ஆய்வு

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை பகுதியில் திருந்திய நெல் சாகுபடி பயிர்களை வேளாண் துணை இயக்குனர் ஆய்வு மேற்கொண்டார்.உளுந்தூர்பேட்டை அடுத்த ஆர்.ஆர்.குப்பம், மூலசமுத்திரம் பகுதிகளில் திருந்திய நெல் சாகுபடி பயிர்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் ஆர்.ஆர். குப்பம் ராமசந்திரன் இடத்தில் பயிரிடப்பட்ட பயிரையும், மூலசமுத்திரம் ரங்கசாமி பயிரையும் வேளாண் துணை இயக்குனர் ராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.திருந்திய நெல் சாகுபடி முறையால் அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியதோடு, வேளாண் திட்டங்கங்கள் மூலம் பயன்பெறுமாறு அறிவுறுத்தினார். அதனை தொடர்ந்து உளுந்தூர்பேட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் ஆய்வு செய்தார்.வேளாண் உதவி இயக்குனர் கருணாநிதி, வேளாண் அலுவலர் சரிதா, விரிவாக்க அலுவலர் பொன்காமராஜ், விதை அலுவலர் மணி ஆகியோரிடம் வேளாண் திட்ட பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

## திருந்திய நெல் சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கல்

தென்காசி : "திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு வேளாண்மை துறை மூலம் மானியம் வழங்குகிறது' என கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:கடையம் வட்டாரத்தில் திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசு வேளாண்மை துறை மூலம் 3 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது. இதில் ஆயிரம் ரூபாய்க்கான இடு பொருட்கள், சிங்சல்பேட், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் இலை வட்ட அட்டை போன்ற இடு பொருட்கள்

வழங்கப்படும். மீதி 2 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு நடவு கூலியாக அனைத்து தொழில் நுட்பங்களையும் கடைபிடித்து, கோனோ வீடர் மூலம் களையெடுத்த பின் வேளாண்மை துறையினரால் ஆய்வு செய்யப்பட்ட பின் வழங்கப்படும்.

மானிய தொகை பெற விரும்பும் விவசாயிகள் கம்ப்யூட்டர் பட்டா அல்லது விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேடு, வாக்காளர் அடையாள அட்டை அல்லது ரேஷன் கார்டு கொண்டு வர வேண்டும். திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பங்கள் அனைத்தையும் கடைபிடித்து நடவு செய்து சாகுபடி செய்திருக்க வேண்டும்.

திருந்திய நெல் சாகுபடிக்கு விதை அளவு குறைவதினால் விதை செலவு குறைகிறது. ஏக்கருக்கு 3 கிலோ விதை பயன்படுத்தினால் போதும். 14 நாட்களான இள நாற்றை நடுவதால் விரைவாக அதிக தூர்கள் பிடிக்கிறது. நீர் மறைய நீர் கட்டுவதால் 40 முதல் 50 சதம் நீர் தேவை குறைகிறது. மண்ணில் நீர் தேங்காமல் மேல்பரப்பை உலர விடுவதாலும் களைக்கருவி கொண்டு மண்ணை கிளறி விடுவதாலும் வேர் பகுதிகளுக்கு அதிக காற்றோட்ட வசதி ஏற்படுகின்றது.

உருளும் களை கருவி (கோனோவீடர்) உருட்டுவதால் பயிரின் பக்க வேர்கள் அறுந்து அதிகமான வீரிய வேர் உண்டாகி சிம்புகள் அதிகமாகி மகசூல் கூடும். உருளும் களை கருவி உபயோகப்படுத்துவதால் களைகளை மண்ணோடு மண்ணாக மக்கி உரமாக்குகிறது. மண்ணில் உள்ள பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்பைரில்லம், சூடோமோனஸ் போன்ற நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகமாக்குகின்றது.

அதிக வேர்களினாலும், அதிக நுண்ணுயிர் செயல்பாட்டினாலும் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக அதிகப்படியாக ஊட்டச்சத்துக்கள் எடுத்துக் கொண்டு பயிர்கள் நல்ல வளர்ச்சி அடைகின்றன. பயிருக்கு பயிர் இடைவெளி இருப்பதால் நோய்கள், பூச்சிகள் மற்றும் எலிகள் தாக்குவது குறையும். கதிர் முற்றும் பருவ காலத்தில் அதிக பச்சை இலைப்பரப்பு இருப்பதால் பதர் இல்லாத நன்கு முற்றிய மணிகள் உண்டாகிறது. அதிக தூர்கள், நீளமான கதிர்கள், கதிர்களில் அதிக எண்ணிக்கையில் மணிகள் மற்றும் பதரில்லா அதிக எடையுள்ள மணிகள் உருவாகுவதால் சிறந்த மகசூல் கிடைக்கிறது.

திருந்திய நெல் சாகுபடிக்கான தொழில் நுட்பங்களை விவசாயிகள் அனைவரும் கடைபிடித்து அதிக மகசூல் பெறலாம்" என வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர் அறிக்கையில் கூறியுள்ளார்.

## இந்திய வேளாண் பொருட்களை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்:ஜெர்மன் பேராசிரியர்

கோவை :""இந்திய வேளாண் விலை பொருட்களை கூட்டுறவு வேளாண்மை முறையில், சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்ய முயற்சிக்க வேண்டும்" என, ஜெர்மன் பேராசிரியர் எல்முட் வீட்லிக் பேசினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலையில், சர்வதேச உணவு தினத்தை முன்னிட்டு, சிறப்பு நிகழ்ச்சி நடந்தது.

ஜெர்மன், ஜார்ஜ் கர்ஸ் நிறுவன பேராசிரியர், எல்முட் வீட்லிக் நிகழ்ச்சியை துவக்கி வைத்து பேசிய

தாவது:

"வேளாண் கூட்டுறவு மூலம் உலகுக்கு உணவு அளித்தல்' என்பது இந்தாண்டின் சர்வதேச உணவு தினத்தின் நோக்கம். வேளாண்துறையில், சேவை கூட்டுறவு, உற்பத்தி கூட்டுறவு, விற்பனை கூட்டுறவு, வினியோக கூட்டுறவு என, பல அமைப்புகள் இயங்கி வருகின்றன.

உற்பத்தியாளர்கள், விஞ்ஞானிகள், வர்த்தகர்கள், தர நிர்ணயாளர்கள் அனைவரும் இணைந்து செயல்படுவது தான் கூட்டுறவு வேளாண்மை.

நெதர்லாந்தில், பசுமை குடில்கள் மூலம் வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, சிறப்பாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவிலும், சர்வதேச சந்தை தேவைகளை அறிந்து ஊட்டச்சத்து நிறைந்த பொருட்களை உற்பத்தி செய்யவும், வேளாண் விலை பொருட்களை கூட்டுறவு வேளாண்மை முறையில், சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்ய முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவில் மருத்துவ குணம் கொண்ட ஆம்லா

(பெரு நெல்லி) அதிகம் பயிரிடப்படுகிறது. இதை தரமாக உற்பத்தி செய்து, சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், ""சுதந்திரத்துக்கு பின் இந்தியாவிலிருந்த சிறிய பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அழிந்து விட்டன.

""அரிசியை அதிகளவு உண்பதால், சர்க்கரை நோய் வருவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அரிசியை முக்கிய உணவாக உண்ணும் கேரளா மற்றும் மேற்குவங்கத்தில் சர்க்கரை நோயாளிகள் எண்ணிக்கை குறைவாக உள்ளது. சர்வதேச அளவில், வரும் 2050ல் சர்க்கரை நோயின் தலைநகரமாக இந்தியா விளங்கும். நார் சத்து நிறைந்த சிறுதானிய பயிர்களை அதிகளவு உற்பத்தி செய்வதால், சர்க்கரை நோயை கட்டுப்படுத்த முடியும்" என்றார். வேளாண் இன்ஜி., "டீன்' சந்தான போசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## மஞ்சள் விலையில் தொடர்ந்து சரிவு நிலை



ஈரோடு: நடப்பாண்டு துவக்கத்தில், மஞ்சள் விலை குவிண்டாலுக்கு, 3,500 ரூபாயாக இருந்தது. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, மாநில அரசு ஜூன் மாதம், "டான்பெட்' மூலம் மஞ்சள் கொள்முதலை துவங்கியது. மஞ்சள் விலை, குவிண்டாலுக்கு, 4,000 ரூபாய் என, நிர்ணயம் செய்யப்பட்டது.ஆனால், அரசு மையத்தில் மஞ்சளை விற்பனை செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.அரசு விற்பனை நிலையங்களை விட, வெளிச்சந்தையில் மஞ்சள் விலை உயர்ந்தது. விவசாய அமைப்புகள், மஞ்சளுக்கு குறைந்த பட்சம் குவிண்டாலுக்கு, 9,000 ரூபாய் விலை அறிவிக்க வேண்டும் என, போராட்டம் நடத்தின.தவிர, விவசாயிகளே மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்ய, ஈரோட்டில் மாநில அளவிலான மாநாடு நடந்தது. தற்போது, மஞ்சள் விலை, மீண்டும் குறையத் துவங்கி விட்டது. இதனால், மண்டிகளில் மஞ்சள் வரத்தும் கணிசமாக குறைந்தது.கடந்த, 12ம் தேதி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், விரலி மஞ்சள் குவிண்டால், 4,693 முதல் 5,869 ரூபாய் வரையிலும், கிழங்கு மஞ்சள், 4,489 முதல், 5,296 ரூபாய் வரையிலும் விற்கப்பட்டன.

விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 370 ரூபாய் குறைந்து, 5,499 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், 197 ரூபாய் குறைந்து, 5,099 ரூபாய்க்கு விற்பனையானது.தமிழக விவசாயிகள் சங்கத்தின் துணைத் தலைவர் துளசிமணி

கூறியதாவது:சென்ற ஆண்டு மஞ்சள் உற்பத்தி அதிகரித்ததால், விலை வீழ்ச்சி அடைந்தது. நடப்பாண்டு, அரசு, "டான்பெட்' கொள்முதல் மையம் துவங்கியதில் இருந்து, வெளிச்சந்தையில் மஞ்சள் விலை உயர்ந்து வந்தது.ஆகஸ்ட் மாதம் குவிண்டாலுக்கு, 8,000 ரூபாய் வரை விலை போனது. தற்போது, வெளிமாநில வியாபாரிகள், திட்டமிட்டு கூட்டணி அமைத்து விலை

நிர்ணயம் செய்வதாலும், ஆன் - லைன் வர்த்தகம் காரணமாகவும், மஞ்சள் விலை மீண்டும் குறைந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை:சிவகங்கை, கலெக்டர் அலுவலகத்தில், அக்.,19 காலை 10.30 க்கு, விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறும். கலெக்டர் ராஜாராமன் தலைமை வகிப்பார். விவசாயிகள் பங்கேற்று அத்துறை சார்ந்த புகார்களை தெரிவிக்கலாம், என, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) முத்துக்கிருஷ்ணன் தெரிவித்தார்.

### வெற்றிலை, தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை:ஆயுதபூஜையால் விவசாயிகள் குஷி

வேலாயுதம்பாளையம்: ஆயுத பூஜை திருவிழா நெருங்கும் நிலையில், வெற்றிலை மற்றும் தேங்காய் பருப்புக்கு திடீரென ஏற்பட்டுள்ள விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் புகளூர், வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், தவிட்டுபாளையம், திருக்காடுதுறை உள்ளிட்ட பகுதிகளில், ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்படுகிறது.காவிரியாற்றின் ஓரத்தில் தண்ணீர் அதிகம் உள்ள பகுதிகளில், அதிகளவில் வெற்றிலை சாகுபடி நடக்கிறது. இதனால், பசுமை மாறாத நிறம் மற்றும் தனிச்சுவை உள்ளதால், கரூர் மாவட்டத்தில் விளையும் வெற்றிலைக்கு உள்ளூர், வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களிலும் நல்ல கிராக்கி உண்டு.

கற்பூர பச்சை கொடி ரகம் அதிகளவில் பயிரிடப் படுகிறது. 100 வெற்றிலை கொண்டது ஒரு கவுளியாகவும், 20 கவுளி கொண்டது ஒரு கூடையாகவும், 26 கவுளிகள் கொண்டது ஒரு முட்டியாகவும், 104 கவுளிகள் கொண்டது, ஒரு சுமையாகவும் பல வகைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

இளங்கால் பச்சை கொடி, 104 கவுளி கொண்ட ஒரு சுமை வெற்றிலை, மூன்றாயிரம் ரூபாய்க்கு விற்றது. தற்போது, நான்காயிரம் ரூபாய்க்கும், முதிகால் பச்சைக்கொடி வெற்றிலை 1,500 ரூபாயில் இருந்து, 1,700 ரூபாய்க்கும், கற்பூர வெற்றிலை ஒரு கூடை, 800 ரூபாயிலிருந்து, 1,200 ரூபாய்க்கும், இளங்கால் கற்பூர வெற்றிலை, ஒரு சுமை, 1,800 ரூபாய் முதல், இரண்டாயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

* வெற்றிலையை தொடர் ந்து தேங்காய் பருப்புக்கும் கிலோவுக்கு, நான்கு ரூபாய் வர விலை

உயர்ந்துள்ளது.தேங்காய்க்கு அதிக விலை மற்றும் சீசன் இல்லாத நேரங்களில், தேங்காயை உடைத்து பருப்பை, எண்ணை நிறுவனங்களுக்கு விவசாயிகள் விற்று வருகின்றனர். தற்போது தேங்காய் பருப்புக்கு அதிக தேவை இருப்பதால், விலை அதிகரித்துள்ளது.
கடந்த சில வாரங்களாக தேங்காய் பருப்பு ஒரு கிலோ, 34 ரூபாய் வரை, தரத்திற்கு ஏற்ற வகையில் விலை போனது. நடப்பு வாரம், ஒரு கிலோ தேங்காய் பருப்பின் விலை, 38 ரூபாயாக உயர்ந்தது.ஆயுதபூஜை மற்றும் நவராத்திரி விழா துவங்கவுள்ள நிலையில், வெற்றிலைக்கு ஏற்பட்ட விலை உயர்வால், ஆடிப்பட்டத்தில் வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**"தாட்கோ' கடனுதவிக்கு விண்ணப்பிக்க 21ம் தேதி கடைசி: இயக்குனர் அறிவிப்பு**

திருச்சி: தொழில் செய்ய "தாட்கோ' மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவி விண்ணப்பம் கால அவகாசம் வரும், 21ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து தாட்கோ மேலாண்மை இயக்குனர் சுகந்தி அறிக்கை:

தாட்கோ மூலம் மானியம் வழங்குவதுக்காக நடப்பாண்டு, 115 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. "இதற்கு விண்ணப்பிக்க இம்மாதம், பத்தாம் தேதி கடைசி நாள்' என, அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, 21ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
இதற்கு விண்ணப்பிப்பவர், இந்து சமய ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும். கண்டிப்பாக, 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் உச்சவரம்பு, ஒரு லட்சம் ரூபாய். மகளிர் சுய உதவிக்குழு சுழல்நிதி திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்பும் மகளிர், 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும். பரிசீலனைக்கு பின் விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்படும். வங்கிகள் கடன் வழங்க உத்தரவாதம் தெரிவித்தவுடன், மானியம் வங்கிகளுக்கு விடுவிக்கப்படும்.

**காய்கறிகளை உண்டால் நோய்கள் வர வாய்ப்பில்லை:உணவு திருவிழாவில் பயனுள்ள கருத்து**

ஊட்டி : "வைட்டமின்கள் நிறைந்த காய்கறிகளை தேவையான அளவு உண்டால், நோய்க்கு இடமில்லை,' என உணவு திருவிழாவில் தெரிவிக்கப்பட்டது.
ஊட்டி நகர விழிப்புணர்வு சங்கம் சார்பில், கிரசன்ட் பள்ளியில் உலக உணவு தின நிகழ்ச்சி நடந்தது. காய்கறி, பழங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், பள்ளி குழந்தைகள்

காய்கறி, பழங்களை போல மாறு வேடங்களில் வந்து பேசினர். குழந்தைகளின் பெற்றோர் காய்கறி, பழங்களில் அலங்கார காட்சி வைத்திருந்தனர்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் டாக்டர் ராம்சுந்தர் பேசுகையில், ""உடல் உபாதையின் போது டாக்டர்கள் பரிந்துரைக்கும் மாத்திரைகளில் வைட்டமின் சத்துகளே அதிகம்; அவை, காய்கறி, பழங்களில் இயற்கையாகவே உள்ளன. தினமும், 225 கிராம் கீரை, 75 கிராம் காய்கள், 35 கிராம் பழங்களை உணவில் சேர்த்து கொண்டால், உடல் உபாதைகள் வராது,'' என்றார்.

பள்ளி தாளாளர் உமர் பாரூக் பேசுகையில்,

""உலகளாவிய உணவு உற்பத்தி குறைவு கவலையளிக்கிறது; உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க அனைவரும் ஒருங்கிணைய வேண்டும்,'' என்றார். விழிப்புணர்வு சங்க தலைவர் ஜனார்தனன் உட்பட பலர் பேசினர். ஓய்வு பெற்ற ஆசிரியர் ராஜுபெட்டன், கவிஞர் நீலமலை ஜே.பி பேசினர்.*ஊட்டி ஒய்.டபிள்யு. சி.ஏ., சார்பில் ஊட்டி காது கேளாதோர் பள்ளியில் நடந்த உணவு திருவிழாவுக்கு அதன் மேலாளர் டைடஸ் தலைமை வகித்தார். குழந்தைகளுக்கு சத்தான உணவுகள் வழங்கப்பட்டன.

## தேயிலை ஏலத்தில் 86 சதவீதம் விற்பனை

குன்னூர் : குன்னூர் ஏல மையத்தில் இந்த வாரம் 86 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

குன்னூர், தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 41வது ஏலம் கடந்த 11 மற்றும் 12ம் தேதிகளில் நடந்தது. இதில் மொத்தம் 14.28 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.

இதில் இலை ரகம் 11லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.28 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் 86 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

சாதாரண இலை ரகம் 70 முதல் 72 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 95 முதல் 130 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் உயர் ரகத்துக்கு 76 முதல் 82 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அனைத்து ரகத்துக்கும் கிலோவுக்கு ரூபாய் 2 விலை சரிந்தது.

## தாலுகா அளவில் தேயிலை வாரிய அலுவலகம் : விழிப்புணர்வு முகாமில் தகவல்

கோத்தகிரி : கோத்தகிரியில் சிறு தேயிலை விவசாயிகளுக்கான தேயிலை சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது.

தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு

பேசுகையில், ""தேயிலை வாரியம், உபாசி ஆகியவை சார்பில், விவசாயிகள் மத்தியில், தேயிலை தரமேம்பாடு குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், ஒரு சில தொழிற்சாலைகளின் தவறான வழிமுறையால் தேயிலை தரத்திற்கு சிறு தடங்கல் ஏற்படுகிறது. இதை தவிர்க்க, நடவடிக்கை எடுக்கப்படும்.

தென் மாநிலங்களில் தேயிலை விலை குறைந்துள்ளது. தரத்தை மேம்படுத்தி, விலை உயர்வு கிடைக்க, சிறு தேயிலை விவசாயிகள், தொழிலாளர்கள், பெரிய எஸ்டேட் அதிபர்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகள் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

தேயிலை விவசாயிகளின் நலன்கருதி, கோத்தகிரி, குந்தா மற்றும் பந்தலூர் உள்ளிட்ட பகுதிகளில் தேயிலை வாரிய அலுவலகம் திறப்பதுடன், வட்டார அளவில் தொழிற்சாலைகளை கண்காணிப்பதற்காக, 3,000

விவசாயிகளுக்கு ஒரு அலுவலரை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

எஸ்சி,எஸ்டி., விவசாயிகள் குழுவாக செயல்படும் பட்சத்தில், தேயிலை வாரியம் அவர்களுக்கு முழுமையான சலுகைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தேயிலை விவசாயிகளும் தவறாமல் வாரியத்தில் பதிவு செய்து, பயனடைய வேண்டும்," என்றார்.

தேயிலை வாரிய உறுப்பினர்கள் டாக்டர் ராமு, கோஷிபேபி, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழக முன்னாள் தலைவர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, உபாசி விஞ்ஞானிகள் குமாரவடிவேலு, ராமமூர்த்தி ஆகியோர் தேயிலை சாகுபடி குறித்து விளக்கம் அளித்தனர்.

இதில், பழங்குடியின விவசாயிகள் உட்பட கோத்தகிரி வட்டாரத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் அதிகளவில் கலந்துகொண்டனர். நூற்றுக்கணக்கான விவசாயிகள் வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தனர்.

தேயிலை வாரிய உதவி இயக்குனர் தியோரி வரவேற்றார். உதவி இயக்குனர் அனுபம்தாஸ் நன்றி கூறினார்.

இதற்கான ஏற்பாடுகளை, நாவா திட்ட மேலாளர் விஜய

குமார், செயலாளர் ஆல்வாஸ், ஒருங்கிணைப்பாளர்கள் முத்துசாமி மற்றும் சண்முகம் ஆகியோர் செய்திருந்தனர்.

## இரண்டாம் போக சாகுபடிக்கு நடவுப்பணி துவக்கம்

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் முதல்போக நெல் சாகுபடி அறுவடை பணி முடிவடைந்து, இரண்டாம் போகத்துக்கான பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கொடிவேரி அணையில் இருந்து அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனம் மூலம், 24 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. முதல்போக சாகுபடிக்காக ஏப்ரல், 16ல் திறக்கப்பட்டது. மே - ஜூனில் குறுவை நெல் சாகுபடியில் குறுகிய கால வயதுடைய, 110 - 125 நாட்கள் நெல் ரகங்கள் சாகுபடி செய்ய வேண்டும். ஏ.எஸ்.டி.16, ஆடுதுறை, 36, 37, 42, 43, 45, 47, கோ 47 மற்றும் வீரிய ஒட்டு நெல் கோ.ஆர்.ஹெச்.3 ஆகிய ரகங்கள் குறுவையில் பயிரிட்டனர்.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்குட்பட்ட கோபி யூனியன், டி.என்.பாளையம் யூனியனில் கடந்த சில வாரங்களாக நெல் அறுவடை பணி தீவிரமாக நடந்தது. கூகலூர் கிளை வாய்க்காலில் பயிரிடப்பட்ட, 2,500 ஏக்கர் நெல் அறுவடை பணியும் முடிந்துள்ளது. நடப்பாண்டு கோபி பகுதியில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததால், வெளி வியாபாரிகளுக்கு விவசாயிகள் நெல் விற்பனை செய்தனர்.முதல்போக அறுவடை பணி முடிந்துள்ளதால், வெளியூரில் இருந்து நெல் அறுவடை செய்ய வந்த இயந்திரங்கள் வேறு பகுதிக்கு செல்ல துவங்கி உள்ளன. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருவதால், இரண்டாம் போகத்துக்கான ஆயத்த பணியில் விவசாயிகள் ஈடுபட துவங்கி உள்ளனர்.விவசாயிகள் கூறியதாவது:

தண்ணீர் பற்றாக்குறை, கூலி ஆட்கள் பற்றாக்குறை, விலை உயர்வு போன்ற சிரமங்களுக்கு இடையே நெல் நடவு செய்தோம்.குறைந்தளவு தண்ணீரில் நெல் சாகுபடி செய்தால் நெல் விளைச்சல் நன்றாக இருந்தது. நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படாததால் ஆந்திரா, கேரளா, கர்நாடகாவை சேர்ந்த வியாபாரிகளுக்கு நெல் விற்பனை செய்து விட்டோம். ஒரு பொதி நெல், 3,800 முதல், 4,000 ரூபாய் வரை வியாபாரிகள் வாங்கி சென்றனர்.ஒவ்வொரு ஆண்டும் முதல்போக பணி முடிந்த கையோடு, இரண்டாம் போகம் துவங்கி விடும். நடப்பாண்டு தண்ணீர் பற்றாக்குறையால் இரண்டாம் போகத்துக்கான பணி துவங்கப்படாமல் இருந்தது. கோபி சுற்று வட்டாரத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையால் உழவு பணியை துவங்கி உள்ளோம். அணையின் நீர்மட்டம் உயர்ந்து தண்ணீர் திறக்கும் பட்சத்தில், நாற்று விட்டு, நடவு பணியை துவங்கலாம்.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## காற்றுடன் கூடிய மழைக்கு சாய்ந்தவாழை மரங்கள்: விவசாயிகள் கலக்கம்

ஓசூர்: ஓசூர் அருகே காற்றுடன் கூடிய கனமழைக்கு, ஆயுதபூஜை அறுவடைக்காக தயாராக இருந்த வாழை மரங்கள் சாய்ந்தன. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த இரு ஆண்டாக பருவ மழைகள் முற்றிலும் ஏமாற்றியது. இதனால், விவசாய பணிகள் பாதிக்கப்பட்டன. இந்தாண்டு ஆழ்துளை கிணறுகளை நம்பி விவசாயிகள், மாவட்டம் ஏற்றுமதி ரக வாழை சாகுபடியில் ஈடுபட்டனர்.

ஓசூர் தாலுகாவில், ஓசூர், தொரப்பள்ளி, பேளகொண்டபப்ள்ளி, சூளகிரி, பாகலூர், பேரிகை, பூனப்பள்ளி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில் விவசாயிகள், 2 ஆயிரம் ஏக்கரில் ரொபஸ்ட்ஃ, ஏலக்கி, செவ்வாழை, பூவன்வாழை, மொந்தன் வாழை, கற்பூரவாழை ஆகியவற்றை நடப்பாண்டு ஆயுதபூஜை பண்டிகை விற்பனையை குறி வைத்து சாகுபடி செய்தனர்.இவற்றில், அதிகப்பட்டசமாக ரொபஸ்ட்டா, ஏலக்கி சாகுபடி செய்துள்ளனர். இங்கு உற்பத்தியாகும் வாழை தார்கள், அரேபியா நாடுகளுக்கும், வடமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் ஏற்றுமதியாகிறது.சூளகிரி அருகே ஏர்ரண்டப்பள்ளி பகுதியில், 20 ஏக்கரில் விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர். தற்போது, ஆயுதபூஜை பண்டிகைக்காக தார் விட்டு அறுவடைக்கு தயாராக வாழை மரங்கள் வளர்ந்து இருந்தது. கடந்த மூன்று நாட்களாக சூளகிரி பகுதியில் நல்ல மழை பெய்தது.

நேற்று முன்தினம் இரவு, சூளகிரி பகுதியில், 70 மி.மீ., மழை சூறைகாற்றுடன் பெய்தது. இதனால், இப்பகுதியில் சாகுபடி செய்திருந்த வாழை மரங்கள் பலத்த காற்றுக்கு சேதம் அடைந்தது. அப்பகுதியை சேர்ந்த ஆனந்தன், சீனிவாசலு, பாலகிருஷ்ணன், குலியப்பா உள்ளிட்ட, 20 விவசாயிகளுடைய நிலங்களில் சாகுபடி செய்திருந்த வாழைகள் பலத்த சேதம் அடைந்தது.இதே போல், தேன்கனிக்கோட்டை, தளி, அஞ்செட்டி பகுதியிலும் சாகுபடி செய்திருந்த வாழை மரங்கள் கடந்த இரு நாளாக சூறைகாற்றுடன் பெய்யும் கனமழைக்கு நாசமடைந்துள்ளதால், விவசாயிகள் கவலைடைந்துள்ளனர்.

## நெல்லை மாவட்டத்தில் மழை தொடர்கிறது அணைகளுக்கு நீர்வரத்தால் நீர்மட்டம் உயர்வு


திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.நெல்லை மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக போதுமான மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவி வந்தது. பல பகுதிகளில் குடிநீர் பிரச்னை கடுமையாக எதிரொலித்ததால் மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டு

வந்தனர். மழை இல்லாததால் விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் திண்டாடினர். அத்யாவசிய பொருட்களின் விலையும் உயர்ந்து வந்ததால் மக்கள் பெரிதும் சிரமப்பட்டு வந்தனர். இந்நிலையில் மாவட்டத்தில் கடந்த ஓரிரு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் அணைகளுக்கும் நீர்வரத்து வந்த வண்ணம் உள்ளது. அணைகளில் நீர்மட்டம்: >பாபநாசம் அணையில் நேற்று காலை நிலவரப்படி 38.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 276.27 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிணது. 304.75 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. சேர்வலாறு அணையில் 51.87 அடி நீர்மட்டம் உள்ளது. மணிமுத்தாறு அணையில் 44.02 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. கடனா அணையில் 52.20 அடி நீர்மட்டம் உள்ளது. அணையில் இருந்து 3 கன அடி தண்ணீர் வெளியேறுகிறது. ராமநதி அணையில் 64 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு வரும் 2 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது. கருப்பாநதி அணையில் 28.22 அடி நீர்மட்டத்தில் அணைக்கு வினாடிக்கு வரும் 2 கன அடி தண்ணீரும் வெளியேறுகிறது. வடக்கு பச்சையாறு அணையில் 2 அடி, நம்பியாறு அணையில் 8.62 அடி, கொடுமுடியாறில் 2.50 அடி நீர்மட்டம் உள்ளது. அடவிநயினார அணையில் 77.50 அடி நீர்மட்டத்தில் அணைக்கு வினாடிக்கு வரும் 3 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.அணை பகுதிகளில் மழை: >மாவட்டத்தில் பாபநாசத்தில் 3 மி.மீ, மணிமுத்தாறில் 12 மி.மீ, நம்பியாற்றில் 54 மி.மீ அளவுகளில் மழை பெய்துள்ளது. அணை பகுதிகளில் தொடரும் மழையின் காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இதனால் அணைகளில் நீர்மட்டம் விரைவில் உயரும் நிலை நிலவுகிறது.சிவகிரியில் அதிகம்: >மாவட்டத்தில் மற்ற பகுதிகளை பொறுத்தவரை அம்பையில் 1.3 மி.மீ, சேரன்மகாதேவியில் 1.4, நான்குநேரியில் 6, பாளையில் 9, சிவகிரியில் 38, நெல்லையில் 2, ஆலங்குளத்தில் 1.2 மி.மீ அளவுகளில் மழை பதிவாகியுள்ளது.தொடரும் மழை:>மாவட்டத்தில் நேற்றும் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நெல்லை, பாளை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் மதியம் வரை வெயில் அடித்தது. மதியத்திற்கு பிறகு இந்த சீதோஷ்ண நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டு பரவலாக விட்டு, விட்டு மழை பெய்த வண்ணம் உள்ளது. நேற்று இரவிலும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.இந்த மழையின் காரணமாக மாவட்டத்தின் பல இடங்களில் விவசாய பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். குடிநீர் பிரச்னைக்கும் ஆங்காங்கே தற்காலிக தீர்வு கிடைத்துள்ளது.மாவட்டத்தில் தொடரும் மழையின் காரணமாக பல பகுதிகளில் தொற்று

நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகளிலும் குழந்தைகள், முதியவர்கள் கூட்டத்தை காண முடிகிறது. மழைக்காலத்தையொட்டி நோய் தடுப்பு முன்னேற்பாடு நடவடிக்கைகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் விரும்புகின்றனர். மாவட்டத்தில் நேற்றைய நிலவரப்படி ஒரு சில நாட்கள் மழை நீடிக்க அதிக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

# விவசாய மலர்

## இயற்கை வேளாண்மையில் கத்தரி சாகுபடி



சாகுபடிக்கு முதலில் தேவைப்படுவது நாற்றங்கால். இதன் பரப்பு 25 அடி நீளம், 4 அடி அகலம், 4 அங்குலம் உயரம் கொண்டதாக இருக்க வேண்டும். நாற்றங்காலுக்கு 500 கிலோ நன்கு மக்கிய தொழு உரம் இடவேண்டும். இதோடு இயற்கை உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா இவைகளை ஒரு கிலோ வீதம் போடவேண்டும். காய்கறி செடிகளில் தோன்றும் மிகக்கொடிய வாடல் நோயினைக் கட்டுப்படுத்த டிரைக்கோடெர்மா விரிடி என்னும் இயற்கை சம்பந்தப்பட்ட பூசனக்கொல்லி ஒரு கிலோ அளவினை நாற்றங்காலுக்கு இட்டு மண்ணினை நன்கு கொத்திவிட வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு 200 கிராம் விதை விதைக்க வேண்டும். நாற்றங்காலைத் தொடர்ந்து நடவுவயல் தயாரிப்பதற்கு நல்ல கவனம் தரவேண்டும். நடவு வயலில் நல்ல வடிகால் வசதி உண்டாவதற்காக உளி கலப்பை கொண்டு உழ வேண்டும். பிறகு நன்கு மக்கிய தொழு உரம் 15 டன் போட்டு நிலத்தை உழுது பார்சால் போடவேண்டும். (இரண்டரை x 2 அடி) நடவு நட்ட 21, 42, 63, 84

ஆகிய நாட்களில் ஒவ்வொரு முறையும் ஒரு டன் மக்கிய தொழு உரம், ஒரு கிலோ பாஸ்போ பாக்டீரியா, ஒரு கிலோ டிரைகோடெர்மா விரிடி இவைகளைக் கலந்து வயலில் இட்டுபாசனம் செய்ய வேண்டும். செடிகளுக்கு கவனமாக பயிர் பாதுகாப்பு செய்ய வேண்டும்.
ஹியூமிக் அமிலம் பயிர் வளர்ச்சிக்கு அவசியம் ஆனது. இன்றைய காய்கறி சாகுபடியில் பல சூழ்நிலைகளில் விவசாயிகள் இயற்கை உரத்தை செடிகளுக்கு அதிகமாக இடமுடிவதில்லை. இம்மாதிரி தருணங்களில் மகசூல் குறைந்து, கிடைக்கும் லாபத்தின் அளவு குறைந்து காணப்படுகின்றது. சில விவசாயிகளுக்கு நஷ்டமும் ஏற்படுகின்றது. இதைத் தவிர்க்க ஹியூமிக் அமிலக் கரைசல் இலை வழியாக தெளித்து வருவதால் மகசூல் அதிகரிக்க வாய்ப்புகள் உண்டு.

**அனுகூலங்கள்:**

இதை தெளிப்பதால் சத்து குறைந்த பூமியில் நல்ல பலன் கிடைக்கும். ஹியூமிக் அமிலம் தெளித்த செடிகளின் வேர்கள் பூமியில் இடப்பட்ட உரத்தை எளிதில் கிரகித்துக் கொள்ளும் தன்மையை ஏற்படுத்துகிறது. இதை தெளிப்பதால் இலையில் பச்சையும், சர்க்கரை சத்து மற்றும் அமினோ அமிலம் உற்பத்தி ஆக உதவுவதால் ஒளிச்சேர்க்கை ஏற்பட்டு மகசூல் அதிகரிக்க வழி வகை செய்கின்றது. தெளிப்பதால் பூமியில் இடப்பட்டுள்ள தழை, மணி, சாம்பல், இரும்பு மற்றும் துத்தநாதகம் போன்றவற்றை செடிகள் எளிதில் கிரகித்துக் கொள்ள உதவுகின்றது. இது செடிகளுக்கு நன்மை செய்யும் நுண்ணுயிர் வளர்ச்சியை ஊக்குவித்து மகசூலை அதிகரிக்க வழிவகை செய்கிறது. செடிகளுக்கு பூச்சி, வியாதிகளை எதிர்த்து வளரும் சக்தியை கொடுக்கிறது.

**ஜே பண்ணையில் பரிசோதனை:**

ஹியூமிக் அமிலத்தின் திறனை அறிவதற்காக கத்தரி சாகுபடியில் இது உபயோகப்படுத்தப் பட்டது. இது பயிரின் 135, 155 மற்றும் 175வது நாளில் தெளிக்கப்பட்டு வந்தது. ஒரு லிட்டர் தண்ணீரில் 5 மில்லி ஹியூமிக் என்ற அளவில் ஒரு ஏக்கருக்கு தேவையான 200 லிட்டர் தண்ணீரில் (ஒரு லிட்டர்/ஒரு ஏக்கர்) கலந்து தெளிக்கப் பட்டது. இவ்வாறு தெளிக்கப்பட்ட செடிகளின் இலைகள் பார்ப்பதற்கும் பச்சை நிறத்துடனும் அதிகமான பூக்கள் காய்களுடனும் பசுமையாக காணப்பட்டது.
நடவு நட்ட மூன்று வாரம் கழித்து மாதம் இருமுறை உயிர் பூச்சிக்கொல்லி மருந்துகளான பவேரியா பாசியானாவை ஒரு லிட்டர் தண்ணீருக்கு மூன்று மில்லி அளவு கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தானது செடிகளைத் தாக்கும் காய்ப்புழுக்களுக்கு வியாதியை உண்டாக்கி கடுவிரைவில் அவைகளை மடியச் செய்து விடுகின்றது. இதைத் தொடர்ந்து இலைகளுக்கும் தண்டுகளுக்கும் பூக்களுக்கும் ஏற்படும் பூச்சிகளின் சேதத்தை தவிர்க்க வாரம் ஒரு முறை பைட்டோபிராட் என்னும் இயற்கை பூச்சிவிரட்டியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து மில்லி அளவு கலந்து தெளிக்கவும். இந்த இரண்டு இயற்கை மருந்துகளும் வெகு சிறப்பாக செயல்பட்டு விவசாயிகள் விஷ மருந்துகளை உபயோகிப்பதில் இருந்து காப்பாற்றுகின்றன.

வளரும் செடிகளுக்கு காலத்தில் பாசனம் செய்ய வேண்டும். இயற்கை முறையை அனுசரிக்கும்போது பாசன செலவில் மிச்சம் ஏற்படும். பாசன நீர் கிரகிக்கப்பட்டு பூமி உலர்ந்தவுடன் ஆட்களை வைத்து கத்தரி செடிகளை சுற்றி பூமியைத் தளர கொத்திவிட வேண்டும். உடனே மக்கிய தொழு உரத்தை பூமிக்கு இட்டு பாசனம் செய்யலாம். விவசாயிகள் தாங்கள் சேகரித்துள்ள தொழு உரத்தை அவ்வப்போது மேலே விவரித்தபடி செடிகளுக்கு இட்டுவர வேண்டும். இதனால் செடிகள் வெகு செழிப்பாக வளர்ந்து வருகின்றன.

மேற்கண்ட பணிகளை கவனத்தோடும் நம்பிக்கையோடும் செய்யும்போது கத்தரி செடிகள் நட்ட 75வது நாளிலிருந்து 120 நாட்கள் வரை அறுவடை கொடுத்துக் கொண்டிருக்கும். ஒரு ஏக்கரில் 65 கிலோ கொண்ட மூடை 135 கிடைக்கும். இயற்கை முறை சாகுபடியில் ஏக்கருக்கு ஆகும் செலவு ரூ.22,000 ஆகும். காய்கள் விற்பனையில் வரவு ரூ.68,000 கிடைக்கும். சாகுபடி செலவு போக ஏக்கரில் நிகர லாபம் ரூ.46,000 கிடைக்கும்.

ரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்து அடிக்கும் சாகுபடி முறையில் சாகுபடி செலவு அதிகரித்துக் கொண்டே வரும். ஆனால் கத்தரி மகசூல் அதிகரிக்காது. இயற்கை முறை சாகுபடி தொடர்ந்து செய்யும்போது சாகுபடி செலவு படிப்படியாக குறைந்துவிடும். ஆனால் கத்தரி மகசூல் அதிகரிக்கும். இதனால் சாகுபடியில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். இனி எதிர்காலத்தில் நீண்ட கால சாகுபடிக்கு இயற்கை முறை சாகுபடிதான் ஏற்றது. அந்த இயற்கை முறை சாகுபடிக்கு சக்தியைக் கொடுப்பது நுண்ணுயிர்களும் உயிர் உரங்களும் ஆகும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## நவீன தொழில்நுட்பம்



துளசி நல்ல துளசி, தூளாய், புனித துளசி, அரி, துளவு குல்லை, வனம் விருத்தம், துமாய், மலாலங்கல் போன்ற பெயர்களிலும் தமிழ் நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ள துளசி லேபியேட்டே என்னும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்த ஆசிமம் சேங்க்டம் என்ற தாவர பெயரால் குறிப்பிடப்படும் நறுமணப் பெயராகும். இலைகள் வெப்பமுண்டாக்கி, கோழையகற்றி, வியர்வை பெருக்கி பண்புகளையும் விதைகள் உள்ளழலாற்றி பண்பையும் கொண்டுள்ளன.

துளசி நறுமணத் தொழிற்சாலைகளிலும் மருத்துவ துறையிலும் அதிகமாக பயன்படுவதோடு வாசனை எண்ணெயையும் கொடுக்கின்றன. துளசி சார்ந்த ஆசிமம் பேரினத்தில் 160 சிற்றினங்கள் காணப்பட்டாலும் முக்கியமாக 10 சிற்றினங்கள்தான் சாகுபடிக்கு உதவுகின்றன. இவை கடல் மட்டத்திலிருந்து 1800 மீட்டர் உயரம் வரையிலும் உள்ள வெப்பமண்டலப் பகுதிகளில் சிறப்பாக வளர்கின்றன.

துளசி வகைகளை பேசிலிக்கம் இனம், சேங்டம் இனம் என்று இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றில் இலைகளுக்காக வளர்க்கப்படும் சேங்டம் இனம் 2 முதல் 3 ஆண்டுகள் வரை வாழ்பவைகளாகவோ அல்லது பல்லாண்டுவாழ் குத்துச் செடிகளாகவோ வளருபவை. இலைகளில் மியூசிலேஜ் போன்ற வழவழப்புத் தன்மை இல்லாமலும் சிறிய மலர்கள் உடனும் காணப்படும் பேசிலிக்கம் வகையில் செடிகளெல்லாம் பல்லாண்டு வாழ் பூண்டுகளாகவும் மிகச்சிறியவைகளாகவும் மியூசிலேஜ் போன்ற வழவழப்புத் தன்மையுடைய இலைகளுடனும் காணப்படும்.

**ரகங்கள்:**

பெரும்பாலும் உள்ளூர் ரகங்களே சாகுபடி செய்யப் படுகின்றன. ஜம்முவிலுள்ள பிராந்திய ஆய்வுக்கூடம் ஆர்.ஆர்.எல்.01 என்ற மேம்படுத்தப்பட்ட ரகத்தை வெளியிட்டுள்ளது. இது எக்டருக்கு 40 டன் தழை மகசூலும் 200 கிலோ எண்ணெய் மகசூலும் கொடுக்கவல்லது.

**இனப்பெருக்கம்:**

விதைகள் மூலமாக இனவிருத்தி செய்யப் படுகிறது. விதைகள் மிகச்சிறியவை களாக, தூள் போன்று இருக்கும். ஒரு எக்டருக்கு தேவையான நாற்று உற்பத்தி செய்ய 150 முதல் 200 கிராம் விதை போதுமானது.

**நாற்றங்கால் தயாரித்தல்:**

விதைகள் மேட்டுப்பாத்திகளில் மார்ச் இறுதியில் விதைக்கப்படுகின்றன. 10 நாட்களில் முளைத்து வெளிவந்துவிடும். 6 முதல் 7 வாரங்களில் நாற்றுக்களை பிடுங்கி நடவு வயலில் நடலாம். விதைகளை முளைப்புத்திறன் கெடாமல் 5 வாரங்கள் வரை சேமித்து வைக்கலாம். துளசி எல்லாவிதமான மண் வகைகளிலும் வளரும் என்றாலும் வடிகால் வசதியுள்ள செம்மண் மற்றும் செம்பொறை மண் மிகவும் ஏற்றது.

துளசி ஒரு வெப்பமண்டல மற்றும் மிதவெப்ப மண்டலப்பயிர். அதிக மழைப்பொழிவும் ஈரப்பதமும் நிரம்பிய இடங்களில் செழித்து வளரும். வறட்சி மற்றும் பனியைத் தாங்கி வளரும் திறன் உடையது. எனினும் அவற்றைப் பயிரிடும்போது எண்ணெயின் அளவு குறைந்துவிடுகிறது. நடவுக்கு பிப்ரவரி மத்திய பகுதி முதல் செப்டம்பர் வரையிலான மாதங்கள் மிகவும் உகந்தவை. விதைகளை நேரடியாக விதைத்தும் சாகுபடி செய்யலாம். அதாவது விதைகளை மணலுடன்

கலந்து 50 முதல் 60 செ.மீ. இடைவெளியில் வரிசையில் சிறிது சிறிதாக விதைத்து அவற்றை மேல்மண் கொண்டு மூடிவிட வேண்டும். நாற்றங்காலில் நாற்றுகள் உற்பத்தி செய்யும்போது எக்டருக்கு 150 முதல் 200 கிராம் விதை தேவைப்படும். நாற்றுக்களை நடவு வயலில் 60 x 60 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடும்முன் நீர்ப்பாசனம் கொடுக்க வேண்டும். பின் 7-10 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்தால் போதும்.

**உரமிடுதல்:**

எக்டருக்கு 20-25 கிலோ தழைச்சத்து, 10-15 கிலோ மணிச்சத்து உரங்களை நடவுக்கு பின் ஒரு மாதம் கழித்து மேலுரமாக கொடுக்கலாம். இதே அளவு உரங்களை ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னரும் 10 முதல் 15 நாட்கள் கழித்து கொடுக்க வேண்டும். மேலும் சாம்பல்சத்தை எக்டருக்கு 75 கிலோ அளவில் இடவேண்டும். நுண்ணூட்டச்சத்துக்களான தாமிரத்தை 50 பி.பி.எம். என்ற அளவில் இலைவழியாக தெளிப்பதன் மூலம் எண்ணெய் மகசூல் அதிகரிக்கிறது. செடிகளின் வளர்ச்சிப்பருவத்தில் தோன்றும் களைகளை அவ்வப்போது அகற்றிவிட வேண்டும். பயிர் பாதுகாப்புக்கு மாலத்தியான் 2 மிலி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கலாம்.

**அறுவடை:**

விதைத்தபின் செடிகளை 90-100 நாட்கள் கழித்து முதன் முறையாக தழைக்காக அறுவடை செய்யலாம். நாற்று நட்ட பயிர்களை 75 முதல் 90 நாட்களில் அறுவடை செய்யலாம். செடிகளை முதல் வருடத்தில் தரை மட்டத்திலிருந்து 25 செ.மீ. உயரத்திலும், 2வது வருடம் 20-25 செ.மீ. உயரத்திலும், 3வது வருடம் 35-45 செ.மீ. உயரத்திலும் அறுவடை செய்ய வேண்டும். பொதுவாக முதல் அறுவடைக்குப்பின் 50-60 நாட்கள் இடைவெளியில் மற்ற அறுவடைகளைச் செய்து தழைகளைச் சேகரிக்கலாம். ஒரு எக்டரில் 25-30 டன் தழை மகசூலும் 200 கிலோ எண்ணெய் மகசூலும் பெறலாம். (தகவல்: சி.ரிச்சர்ட் கென்னடி, ஹேமலதா, தோட்டக்கலை மலரியல் ஆராய்ச்சி நிலையம், தோவாளை)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## புதினா சாகுபடி



புதினாவின் விவசாயப்பணி என்பது மிக எளிமையான சிறந்த தொழிலாகும். நிலவளம் உள்ள ஏழை நிலச் சுவான்தார்கள்கூட இந்தத் தொழிலின் மூலம் பெரும்பணம் திரட்டலாம். வளமான ஈரப்பதம் உள்ள மண் புதினா விவசாயத்திற்கு மிகவும் அவசியமாகும். படர்ந்து விரிந்த தென்னந்தோப்புகளில் நன்றாக நிலத்தை உழுதபின் மக்கிய கோழிக் கழிவுகளை ஏக்கருக்கு 5 டன் வீதம் முதலில் இடவேண்டும். இதன்பிறகு ஒரு மூடை டி.ஏ.பி.யும் ஒரு மூடை மூரேட் ஆப் பொட்டாசியமும் அடித்தள உரமாக இடவேண்டும். தென்னை மரங்களிலிருந்து நான்கடி தூரத்தில் 8 து 6 அடி பாத்திகளை வாய்க்கால் வசதிகளுடன் சீராக அமைக்க வேண்டும். ஒன்றரை அடி ஆழத்திற்கு பாத்திகளைத் தோண்டி, கிளறிவிட்டு, நீர் பாய்ச்சி, நடுவதற்கு தயார் செய்ய வேண்டும்.

நடுவதற்காக 20 செ.மீ. முதல் 25 செ.மீ. வரை நீளம் உள்ள புதினா தண்டுகளையும், கிளை விழுதுகளையும் பயன்படுத்தலாம். தண்டுகளைச் செங்குத்தாக நடவேண்டும். சுமார் ஐந்து செ.மீ. பதிந்து இருக்கும்படியும் அதில் ஒன்று அல்லது இரண்டு கணுக்கள் இருக்குமாறும் வேர் விடுவதற்கு ஏதுவாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். செடிக்குச் செடி, வரிசைக்கு வரிசை, 20 முதல் 25 செ.மீ. இடைவெளி இருக்க வேண்டும். நடுவதற்கு ஏற்ற காலம் ஜூலை மாதம் முதல் ஜனவரி மாதம் வரை உள்ளதாகும்.

நிலத்தின் ஈரத்தன்மையைப் பொறுத்து வாரத்திற்கு இருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். நட்ட 60 நாட்களில் கூரான கத்திகளால் புதினாவை அறுவடை செய்யலாம். வேரிலிருந்து 3 செ.மீ. விட்டு, 25-30 செ.மீ. நீளம் உள்ள தழைகளை அறுவடை செய்யலாம். அதைத் தொடர்ந்து அறுவடைகளை 55-60 நாட்கள் இடைவெளியில் மேற்கொள்ளலாம். அறுவடையைக் காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் மாலையில் 4 மணி முதல் 6 மணி வரையிலும் செய்யலாம். அறுவடை செய்த தழைகளை அதே நாளில் விற்பனைக்கு கொண்டுசெல்ல வேண்டும். மேலும் அறுவடை செய்தவுடன் நிழல் உள்ள அறைகளில் போட்டு தென்னஞ் சோகைகளைக் கொண்டு மூடி, புதினாவின் புதுத்தன்மை மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு அறுவடை முடிந்தபின், பதினைந்து நாட்களுக்குப் பிறகு மேலுரம் இடவேண்டும். இதற்காக ஏக்கருக்கு 20கிலோ டி.ஏ.பி., 20 கிலோ பொட்டாஷ், 10 கிலோ பாக்டம்பாஸ் ஆகியவற்றை 36 லிட்டர் தண்ணீரில் கரைத்து, பின் அதில் 400 லிட்டர் தண்ணீர் சேர்த்து, பாசன நீருடன் கலக்கும் விதத்திலான அமைப்பைச் செய்ய வேண்டும். இவ்விதம் ஒரு ஆண்டில் ஆறுமுறை செய்ய வேண்டிவரும். உரம் இடுவதற்கு முன்பே பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை களை எடுக்க வேண்டும். இவ்விதமான புதினா விவசாயம் மிக நல்ல பலனைக் கொடுக்கும்;

பணப்பயிராக விளங்கும். (தகவல்: ஸ்பைசஸ் இந்தியா, கொச்சி. மூலம்: எம்.எஸ்.ராமலிங்கம், கோவை)

**-எஸ்.நாகரத்தினம், விருதுநகர்**

இன்றைய வேளாண் செய்திகள்

16.10.2012 P.M

17.10.2012 A.M

## பரம்பிக்குளம், ஆழியாறு பாசனத்துக்கு 1250 கனஅடி தண்ணீர் திறக்க உடன்பாடு



கோவை: பரம்பிக்குளம்,ஆழியாறு பாசன திட்டத்தில் தமிழகத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களை சேர்ந்த 3.70 லட்சம் ஏக்கர் நிலங்களும், கேரளாவில் பாலக்காடு மாவட்டம் சித்தூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் 1.50 லட்சம் ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. இப்பாசன திட்டத்தில் உள்ள நீராறு அணையில் இருந்து ஆண்டு தோறும் நீர் பகிர்வு செய்து கொள்வது குறித்து விவாதித்து முடிவெடுக்க நீர் பகிர்வு கூட்டு ஆலோசனை வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் செப்டம்பர் மாதத்திற்கு பின் கேரளாவுக்கு வழங்கவேண்டிய தண்ணீர் குறித்து விவாதிக்க நீர் பகிர்வு கூட்டு ஆலோசனை வாரியக்கூட்டம் கோவையில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு வாரியத்தின் தலைவர் லத்திகா (கேரள மாநில நீர்பாசனத்துறை தலைமை பொறியாளர்) தலைமை வகித்தார். இதில் தமிழக உறுப்பினராக உள்ள பொதுப்பணித்துறை கோவை மண்டல தலைமை பொறியாளர் ரங்கநாதன் உட்பட இரு மாநில மின் வாரியம் மற்றும் வனத்துறை அதிகாரிகளும் பங்கேற்றனர்.இக்கூட்டத்தில் தற்போது பரம்பிக்குளம்,ஆழியாறு பாசன திட்ட அணைகளின் நீர் இருப்பு குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழக தரப்பில் அணையின் இருப்பை பொறுத்து டிசம்பர் 15 வரை 1250 மில்லியன் கனஅடி (1.2

டிஎம்சி) தரமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை கேரள அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர். அதேபோல் கடந்தாண்டு 7.25 டிஎம்சி தண்ணீர் வழங்கியதற்கும் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.கூட்டத்திற்கு பின்னர் லத்திகா, ரங்கநாதன் ஆகியோர் கூறியதாவது: இரு தரப்பு பேச்சுவார்த்தை சுமூகமாக முடிந்தது. இரு தரப்பினருக்கும் பாதிப்பில்லாத வகையில் பங்கீடு செய்யபட்டது. இந்தாண்டு தற்காலிக தீர்வாக டிசம்பர் 15 வரை 1250 மில்லியன் கன அடி வழங்க உடன்பாடு ஏற்பட்டது. வடகிழக்கு பருவமழை கை கொடுக்கும் பட்சத்தில் டிசம்பர் 15க்கு பின்னர் மீண்டும் ஒருமுறை கூடி உரிய முடிவெடுக்கப்படும் என்றனர்.

## நீர்பிடிப்பு பகுதிகளில் மழை : மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர்: நீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. நேற்று மாலை வினாடிக்கு 15,621 கனஅடியாக நீர்வரத்து அதிகரித்தது.காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் வழங்குவது தொடர்பான பிரதமரின் உத்தரவு மற்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளை கர்நாடக மாநில அரசு ஏற்க மறுத்துள்ளது. நீதிமன்ற உத்தரவுப்படி தினமும் 9 ஆயிரம் கனஅடி தண்ணீரை வெளியேற்றிய கர்நாடக அரசு தற்போது தண்ணீர் திறப்பதை நிறுத்தியுள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு கடந்த சில நாளாக நீர் வரத்து குறைவாகஇருந்தது. இந்நிலையில், கடந்த 2 நாட்களாக காவிரி நீர் பிடிப்பு பகுதியில் இரவு நேரங்களில் கன மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 1246 கனஅடியாக இருந்த நீர் வரத்து நேற்று காலை 6,695 கனஅடியாக அதிகரித்தது. நண்பகல் நேரத்தில் நீர்வரத்து 15,000 கனஅடிக்கும் அதிகமாக உயர்ந்தது. மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 15,621 கனஅடி

வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பாசனத்திற்காக 16,015 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. நீர்மட்டம் 63.53 அடியாகவும், நீர் இருப்பு 27.38 டி.எம்.சி. ஆகவும் உள்ளது.

## தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு



சென்னை : ஆந்திர மாநிலத்தில் முக்கிய இடங்களில் தென்மேற்கு பருவமழை முடிவுக்கு வந்துள்ளது.  இந்நிலையில் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கன மழை பெய்யும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவ மழைக்காலம் இறுதி கட்டத்தை எட்டியுள்ள நிலை யில், ஆந்திராவின் ஒரு சில இடங்களில் முடிவுக்கு வந்துள்ளது. கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களிலும் மழையின் அளவு குறைந்து கொண்டே வருவதால் சில நாட்களில் அங்கும் தென்மேற்கு பருவ மழை முடிவுக்கு வந்துவிடும்.

தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்பட தொடங்கியுள்ளது.  முதற்கட்டமாக லட்ச தீவு பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் காற்று சுழற்சி உருவானதால் நேற்று தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. அதிகபட்சமாக தேன்கனிக்கோட்டை, நீலகிரி, சங்ககிரியில் 60 மிமீ மழை பெய்துள்ளது. பெரியகுளம் 50 மிமீ, சூளகிரி, பாலக்கோடு 40 மிமீ, சென்னை நுங்கம்பாக்கம், தளி, தேனி, சேலம், வால்பாறை 30 மிமீ, ஏற்காடு, ஓமலூர், செங்கம், சென்னை அண்ணா பல்கலைக்கழகம், டிஜிபி அலுவலகம், பரமத்தி வேலூர், போடி, சோழவந்தான், ஸ்ரீவில்லிபுத்தூர் 20 மிமீ மழை பெய்துள்ளது.

தமிழகத்தில் வட கிழக்கு பருவமழை அடுத்த 2 நாட்களில் தொடங்க உள்ளது. லட்சத்தீவு பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சி அதே இடத்தில் நிலை கொண்டுள்ளதால் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் கன மழைபெய்யும்

வாய்ப்புள்ளது. ஒரு சில இடங்களில் இடியுடன் மழை பெய்யும். இருப்பினும் தமிழகத்தில் குறைந்தபட்சமாக 24 முதல் 30 டிகிரி செல்சியஸ் வரை வெயில் இருக்கும். இவ்வாறு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

16th oct 2012 P.M

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

நாமக்கல், : கொல்லி மலை, செம்மேடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அட்மா திட்டத்தின் கீழ், 50 விவசாயிகளுக்கு, மிகச்சிறு தானிய பயிர் சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது.

ஒன்றிய குழுத்தலைவர் சந்திரசேகரன் தலைமை வகித்து பேசினார். கொல்லிமலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் சவுந்தர்ராஜன், நெல் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய மாறுபட்ட தொழில் நுட்பம், திருந்திய நெல் சாகுபடி குறித்து பயிற்சி அளித்தார்.

அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுரேஷ், பிரபு, தியாகராஜன், உதவி வேளாண் அலுவலர்கள் செல்லதுரை, கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒலக்கூரில் நடந்தது காய்கறி உற்பத்தியாளர் கலந்தாய்வு கூட்டம்

திண்டிவனம், : திண்டிவனம் அடுத்த ஒலக்கூரில் புறநகர் காய்கறி உற்பத்தியாளர் தொகுப்பு திட்டத்தின் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் ராசு கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

காய்கறி உற்பத்தி பண்ணை வருமானம் பெருக்குவது, வறுமை போக்குவது, உணவு பாதுகாப்பு, நிலைத்தன்மை, பொருளாதார வளர்ச்சி என விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

விவசாயிகளுக்கு போக்கு

வரத்து, சேமிப்பு கிடங்கு, பதப்படுத்துதல் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாதது காய்கறி 30 சதவீதத்தில் இருந்து 40 சதவீதம் வரை வீணாகிறது. இதனால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது.

புறநகர் காய்கறி உற்பத்தியாளர் தொகுப்புகளின் வளர்ச்சித்திட்டம் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் காய்கறி உற்பத்தி பெருக்கிட, அறுவடை பிந்தைய மேலாண்மை தொழில்நுட்பங்களை பற்றி விவசாயிகளுக்கு கற்றுத்தரவும், விவசாயிகளை ஒருங்கிணைத்து பதிவு செய்யப்படுகிறது. இக்கூட்டமைப்பு மூலம் தன்னாட்சிப்பெற்று விளை!பொருட்களுக்கு, விலை நிர்ணயம் செய்திடவும், காய்கறி விதை,

நிழற்வலைகள், சேமிப்பு கிடங்கு, குளிரூட்டப்பட்ட மூடுந்துகள் மானியத்தில் வழங்கிடவும் முடியும் என்றார். இதில் தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் கார்ல்மார்க்ஸ், அன்பழகன், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் விக்ரமன், சந்திரமோகன், தினேஷ், கள பணியாளர்கள் மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தரமற்ற விதைகள் விற்றால் விற்பனை நிலையம் மீது நடவடிக்கை வேளாண் அதிகாரி எச்சரிக்கை

கோவில்பட்டி, : தரமற்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்பனை செய்தால் விதை விற்பனை நிலையம் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணபிரசாத் விடுத்துள்ள செய்திக் குறிப்பு;

தூத்துக்குடி மாவட்டத் தில் நடப்பாண்டில் பல்வேறு பயிர்களில் 1365 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டதில் 100 மாதிரிகள் இனத்தூய்மை பரிசோதனைக்காகவும், 90 மாதிரிகள் நச்சுத்தன்மை பரிசோதனைக்காகவும், 1175 மாதிரி கள் முளைப்புதிறன் பரிசோதனைக்காகவும் பரிசோதிக் கும் பொருட்டு உரிய ஆய்வகங்களுக்கு அனுப்பபட்டுள்ளன.

694 விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொண்டு குறைபாடுகள் காணப்பட்ட விற்பனை நிலையத்தின் உரிமம் ஒரு மாதத்திற்கு நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

உரிமம் இல்லாத இடங்களில் விதை விற்பனை செய்வது, அவ்வாறு விதை விற்பனை செய்பவர்வகளுக்கு துணைபோவது, ஆதாரமற்ற விதைகள் விற்பனை செய்வது, தரம் நிர்ணயம் செய்யப்படாத விதைகள் விற்பனை செய்வது, விவசாயிகளுக்கு விற்பனை பட்டியலில் வழங்காமல் விற்பனை செய்வது, இதர இருப்பு ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்படாமல் விற்பனை செய்வது போன்றவை தண்டனைக்குரிய குற்றமாகும்.

இத்தகைய தவறுகள் நடக்காதவாறு தீவிரமாக விதை விற்பனை நிலையங்கள் ஆய்வு செய்யப்படுகிறது என தெரிவிக்கப்

பட்டுள்ளது

DAILY THANTHI
வெல்க தமிழ்

இன்றைய வேளாண் செய்திகள்

17.10.2012 A.M

**வேளா விளைபொருட்களை பாதுகா பாக வை பதற்கு**
**ரூ.97 கோடியில் 1,141 சேமி பு கிடங்குகள்**
**வீடியோ கான்பரன்சிங் மூலம் ஜெயலலிதா திறந்துவைத்தார்**

வேளா விளைபொருட்களை பாதுகா பாக வைத்திருந்து நல்ல விலை கிடைக்கும்போது விற்பதற்கு வசதியாக ரூ.97 கோடியே 20 லட்சம் செலவில் கட்ட பட்டுள்ள 1,141 சேமி பு கிடங்குகளை முதல்–அமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் தலைமை செயலகத்தில் வீடியோ கான்பரன்சிங் மூலம் திறந்துவைத்தார்.

இதுகுறித்து அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறி பில் கூறியிரு பதாவது–

குறைந்த விலையை தவிர்க்க...

விவசாயிகள் உச்சகட்ட அறுவடைக்காலங்களில் தங்களது அவசர பணத் தேவைக்காக வேளா விளை பொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்த்து, வேளா உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் அல்லது தொடக்க வேளா மை கூட்டுறவு கடன் சங்கங்களின் கிடங்குகளில் தங்களது விளைபொருட்களை பாதுகா பாக வைத்து அதன் விலையில் 60 முதல் 80 சதவிகிதம் வரையிலான தொகையினை தானிய ஈட்டுக் கடனாக பெற்றுக்கொள்ளலாம்.

விவசாயிகளின் வேளா விளைபொருட்கள் ஏல மையத்தில் ஏலம் விட பட்டு விற்பனை செய்ய படும்பொழுது ஏலம் எடுக்க பட்ட வேளா விளைபொருட்களுக்கான மொத்த தொகை ம் வியாபாரிகளால் செலுத்த படும் வரை வேளா மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்க கிடங்கில் ஒரு மாதம் வரையில் சேமித்து வைக்க வழிவகை செய்ய பட்டுள்ளது.

1,141 சேமி பு கிடங்குகள்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் கிடங்குகளின் சேமிக்கும் திறன் 8 லட்சம் மெட்ரிக் டன் ஆக உள்ளது. இதனை மேலும் அதிகரித்து, விவசாயிகளின் பயன்பாட்டிற்கு போதுமான சேமி பு வசதி ஏற்படுத்தும் நோக்கத்துடன் 2011–2012–ம் ஆ டில் 29 மாவட்டங்களில் தொடக்க வேளா மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொ ட 1,116 கிடங்குகள், வேளா உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொ ட 16 கிடங்குகள், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொ ட 7 கிடங்குகள், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொ ட 2 கிடங்குகள், என மொத்தம் 1,141 கிடங்குகள் ஊரக உள்கட்டமை பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.97 கோடியே 20 லட்சம் செலவில் கட்டி முடிக்க பட்டுள்ளது. இதன்மூலம், கூட்டுறவு சங்கங்களில் கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 9,30,600 மெட்ரிக் டன் ஆக

அதிகரிக்கும்.

ஜெயலலிதா திறந்துவைத்தார்

விவசாயிகளின் நலன் காக்க தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் மூலம் சேமி பு கிடங்குகள் கட்ட படும் என்று சட்ட பேரவையில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடந்த ஆகஸ்டு 25–ந் தேதி அறிவித்தார். அதன்படி, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் அதிக அளவிலும், விரைந்தும் கட்டி முடிக்க பட்ட 1,141 சேமி பு கிடங்குகளை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக முதல்–அமைச்சர் நேற்று முன்தினம் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகா புத் துறைச் செயலாளர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொ டனர்.